**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
🔍Peer-Reviewed | 🌐 Open Access | 🔗 Crossref DOI & Global Indexing | 📊 Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.13
https://ngmtamil.in/

# முகிலை இராசபாண்டியனின் நாவல்களில் வெளிப்படும் பண்பாட்டுக் கூறுகள்

**ஆறுமுகச்செல்வி. மு,**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்), தமிழ்த்துறை, நிர்மலா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கோவை - 18. அலைப்பேசி எண்: 63807 32348. arumugaselvima1990@gmail.com

**முனைவர் மகேஸ்வரி.ப,**
உதவிப்பேராசிரியர் & தமிழ்த்துறைத்தலைவர், நிர்மலா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கோவை - 18.

**ஆய்வுச் சுருக்கம்**

நாவல்களில் பண்பாட்டுக் கூறுகள் ஒரு சமூகத்தின் உணவு, ஆடை, நம்பிக்கைகள், சடங்குகள், மொழி வழக்கு, தொழில் மற்றும் கலை போன்ற வாழ்வியல் முறைகளை உரைநடை வழியாகப் பதிவு செய்வதாகும். நாவல்களில் பண்பாட்டுக் கூறுகளின் முக்கிய அம்சங்களாக, வாழ்க்கை முறை மற்றும் உணவில் - உணவு உற்பத்தி முறைகள், உண்ணும் பழக்க வழக்கங்கள் கலாச்சார அடையாளங்களாகப் பதிகின்றன. இத்தகைய பண்பாடு பிறப்பால் வருவதில்லை, சமூகத்தில் இருந்து கற்றுக்கொள்ளப் படுகிறது. புதிய அனுபவங்களுக்கு ஏற்ப மாற்றமடையும் தன்மையை உடையது. முகிலை இராசபாண்டியன் நாவல்களில் கன்னியாகுமரி மக்களின் வாழ்வியல் மற்றும் வரலாற்றுப் பின்புலம் உறவுமுறைகளை தொழில் பிரதிபலிக்கும் ஒரு கலாச்சார ஆவணமாகத் திகழ்கிறது. இவரது நாவல்கள் குறிப்பாக மற்றும் சமூகப் பின்னணியில் படைக்கப்பட்டவையாகும்.

தமிழரின் தொன்மையான பண்பாட்டுக் கூறுகளைப் பிரதிபலிப்பவை. கடலோரப் பகுதி மக்களின் வழிபாட்டு முறைகள், நாட்டுப்புறத் தெய்வ வழிபாடுகள், நம்பிக்கைக்கூறுகள், நாட்டுப்புறக் கதைகள், பழமொழிகள் மூலம் பண்பாட்டு வேர்களைச் சுட்டிக்காட்டியுள்ளார். சமூக வாழ்வியலும் விழுமியங்களை பண்பாட்டு கூறும் வகையில் தமிழர்களின் விருந்தோம்பல் பண்பாடு, காதல், நட்பு, ஈகை போன்ற பண்பாட்டுப் பதிவுகள் நாவல்களில் இழையோடுகின்றன.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**ஆய்வு முன்னுரை**

நாவலின் மையப் பொருளாக விளங்குவன கதைக்கருக்களாகும். கதைக்கரு இயல்பாக அமைதல் வேண்டும். ஆசிரியர் பாடுபட்டு வலிந்து அமைப்பதாக இருத்தல் ஆகாது. நடக்கக் கூடியதே என்று நம்பத்தக்க வகையில் இயல்பாக அமையும் கருவே கதைக்கு கவர்ச்சி தருவதாகும். ஒவ்வொரு நாவலுக்கும் ஒவ்வொரு கதைக்கரு என்கிற வகையில் ஐந்து நாவல்களைப் படைத்துள்ளார். இந்தக் கதைக் கருக்கள் பெரும்பாலும் நாடார், மீனவர் போன்ற ஒடுக்கப்பட்ட சாதிகளைப் (பெரும்பாலும்) பெரும்பான்மையாக மையப்படுத்துவனவாக உள்ளன. சிறுபான்மை வேளாளர், நாயர் போன்ற உயர்ந்த சாதிகளைப் பற்றியதாகவும் உள்ளன. இத்தகைய நாவல் போக்கினைப் படைக்கும் நாவலாசிரியர் நாவலில் கதைக்கரு இடையிடையே பண்பாட்டுக் கூறுகளை இயல்பாகவே செதுக்கியுள்ளார். இந்த பண்பாட்டுக் கூறுகள் அனைத்தும் கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழும் மக்களை அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

**இல்வாழ்க்கை**

தமிழர் பண்பாட்டில் இவ்வாழ்க்கையானது கணவன், மனைவி கூடி வாழும் நிலை மட்டுமல்ல, அன்பையும், அறத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு புனிதமான சமூக அமைப்பாகும். இதனை முகிலை இராசபாண்டியன் நாவலான, ஆலங்கால் நாவலில், ரெங்கம்மாள் தனது தங்கையின் திருமணத்திற்கு இரண்டு நாள் முன்பே செல்ல ஆசைப்பட்டாள். இருப்பினும் தனது கணவர், தர்மலிங்கம் பனை ஏறும் தொழில் என்பதால் வர இயலாத சூழ்நிலைமை புரிந்து கொண்டு, "உங்க வருமானத்திலேயும் உங்க தொழில்லையும் நான் சந்தோஷமா இருக்கிறேன். எனக்கு அது போதும். கடை வியாபாரம் செய்யுறவங்களும் உங்களைப் போலத்தான். ஒரு நல்லது கெட்டதுக்கு நிக்க முடியாது அதுக்காக வியாபாரத்த மத்தவங்ககிட்ட கொடுத்துவிட்டு போக முடியாது!" என்று கூறி இன்றைக்கு நான் மட்டும் செல்கிறேன். “கல்யாணத்துக்கு மட்டும் கொஞ்சம் காலையிலேயே வந்திருங்க" என்று கூறினாள்.

**தெய்வ வழிபாடும் நம்பிக்கையும்**

நாவல்களில் தெய்வ வழிபாடு என்பது மக்களின் வாழ்வியல், கலாச்சாரம் நம்பிக்கை மற்றும் சமூக நிலையை வெளிப்படுத்தும் ஒரு முக்கியக்கூறாகும். ஆலங்கால் நாவலில் ரெங்கம்மாள் மயங்கி விழுவதும், நாடி பார்த்து பதில் சொல்லும் தங்கலட்சுமி, ரெங்கம்மாள் கருவுற்று இருக்கிறாள் என்பதை முதலில் கூறாமல், “உங்க அய்யா, அம்மா கல்லறையில் பொங்கல் போடுங்க, ஆலமூட்டு இசக்கியம்மனையும், சுடலை மாடனையும் மறந்திடாதீங்க" என்று கூறிய பின்பு, ரெங்கம்மாள் கருவுற்றிருக்கிறாள் என்று கூறுவது, கிராமப்புறங்களில் வாழ்க்கையில் சந்தோஷத்தையும், இன்னல்களையும் முதலில் பகிர்வது குல தெய்வத்திடமே.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**அம்மன் தெய்வ வழிபாடு**

சமய - மத நம்பிக்கைகள் சமூக மக்களின் பண்பட்ட வாழ்வை வெளிப்படுத்துகின்றன, நம்பிக்கையின் வெளிப்பாடாக தேரிமணல் நாவலில், மண்டைக்காட்டு அம்மனின் கொடை விழா காட்டப்பட்டுள்ளது. முதல்நாள் கொடியேற்றத்துடன் தொடங்கும் இத்திருவிழா பத்துநாட்கள் நடைபெறும். பத்துநாள் விழாவில் ஒடுக்கு பூசை, வலியட்க்கை என்னும் மகாபூசை அம்மன் உலாவரும் நிகழ்வான பெரிய சக்கர தீவட்டி, அதிகாலை சாஸ்தா கோவிலில் இருந்து கிளம்பும் களபவனி முதலிய முக்கிய நிகழ்ச்சிகளாகும். மக்கள் இறைவனை வழிபடும் நிகழ்ச்சிகளில் நேர்ச்சையாக பூமாலை இடுதல், இடுமுடி எடுத்தல், குத்தியோட்டம் போன்றவை குறிப்பிடப்படுவனவாகும்.

குமரி மாவட்ட பெண் தெய்வங்களுள் தனிச்சிறப்பும் பெற்ற தெய்வமாக மண்டைக் காட்டுப் பகவதி அம்மன் குறிக்கப்படுகிறாள். புற்று வடிவிலிருக்கும் தேவி தொடக்கத்தில் இருந்து வளர்ந்து வந்ததாகக் கூறப்படுகிறது.

"அம்மை இங்கே வளர்ந்துக்கிட்டே இருந்தா தெரியுமா? பதினைஞ்சடி உயரமா வளர்ந்த பிறகு எங்களால ஒனக்குக் கோயில் கட்ட முடியாதும்மா; வளர்றதை நிறுத்திக்கோன்னு திருவிதாங்கூர் ராசா, கால்ல விழுந்தாங்க. அன்னைக்கு ராத்திரி அவன் கனவில் அம்மைபோய்... நானு வளராம இருக்க மாட்டேன் ஆனா வேகத்தைக் கொறைச்சிக்கிடுறேன்.

இனி ஒவ்வொரு வருஷமும் ஒரு நெல் அளவுதான் வளருவேன்னு சொல்லிச்சாம். அதுக்குப் பிறகு தான் இப்போ நாம பாக்கிற கோயிலைக் கட்டினாங்களாம்."

புற்று வடிவிலிருக்கும் தேவிக்கு முன்பாக மூலவர் வெண்கலச் சிலையாக நின்ற கோலத்திலும் வெள்ளிச் சிலையாக அமர்ந்த கோலத்திலும் காட்சித்தருகிறார்.

**இயற்கை வழிபாடு**

ஆதி மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்வில் பயணப்பட்ட போது தனக்கு நேர்ந்த இன்னல்களைக் கொண்டு இயற்கைப் பொருட்களுக்கு அதீத ஆற்றல் இருப்பதை உணர்ந்து வழிப்படத் தொடங்கினர். மழை, காற்று, தீ ஆகியவற்றை கடவுள் என வணங்கி வழிபட்டான். இதுவே இயற்கை வழிபாடானது.

அருகருகே நான்கு வீடுகள் நாவலில் இயற்கை வழிபாடானது தீப வழிபாட்டை சந்திரவதி மேற்கொள்வதை நாவல் விரிக்கிறது. மண்டைக்காட்டு அம்மனின் தீவட்டி விழா இயற்கை வழிபாட்டின் பாற்பட்டதாகும்.

**குலக்குறி வழிபாடு**

குலக்குறி வழிபாடானது, வில்ஹெல்ம் என்பவர், மக்களின் ஆவி விலங்குகளில் சென்றடையும் என்ற நம்பிக்கையில் எழுந்ததே குலக்குறி வழிபாடு என்றும் இது தொன்மைச்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

சமுதாயத்தின் ஒரு பகுதி என்றும் கூறுகிறார். நாகம், அரசமரம், வேப்பமரம், துளசி போன்றவை குலக்குறி வழிபாட்டிற்குரியன. அருகருகே நான்கு வீடுகள் நாவலில்,

"போன அறுப்பு முடிஞ்சதுக்குப் பெறகு இன்றும் நம்ம ஐயாவுக்கும் அம்மைக்கும் பொங்கல்லையே... ஒரே கெட்ட சகுனமா இருக்கு. இன்னைக்கு நல்லது வந்து பயங்காட்டிட்டிருக்கு. அதுதான் அடுத்து வெள்ளிக்கிழமை பொங்கிடலாமான்னு நெனைக்கேன்.." என்ற சின்னமணியின் வார்த்தையிலிருந்து வெளிப்படும் 'நல்ல பாம்பு' குலக்குறியாக அறியப்படுகிறது.

**முன்னோர் வழிபாடு**

தமிழரிடையே எழுந்த நடுகல் வழிபாட்டின் வளர்ச்சி முன்னோர் வழிபாடாகும். சின்னமணி மற்றும் உடன் பிறந்தோர் என மொத்த குடும்பமும் ஒன்று சேர்ந்து தங்கள் குல மூதாதையர்க்குப் பொங்கல் வைக்கச் சென்றார்கள். உடன் சில உறவுகளும் சென்றனர்.

**கல்லறையில் இருந்த கல்வெட்டில்**

சிவமயம்

சுடலை மாடன் துணை

முகிலன் குடியிருப்பு ஊர் சுடலையாண்டி நாடார் மகன் மாசானம் நாடார் மகனான சுப்பையா

நாடார் 1116ஆம் வருஷம் கார்த்திகை மாசம் 18 ஆம் தேதி சிவலோக பதவி அடைந்தார்.

என்று பொறிக்கப்பட்டிருந்தது. கல்லறைக்கு முன் மூன்று இலை போடப்பட்டது. ஒவ்வொரு இலையிலும் பொங்கல் வைக்கப்பட்டது. மற்றொரு இலையின் மேல் வெற்றிலை பாக்கு, வாழைப் பழக் குலை வைக்கப்பட்டன. கல்லறையின் கல்வெட்டைச் சுற்றி மாலை போல் கட்டிய மலர் சூட்டப்பட்டது. சந்தனம் கல்லறையைச் சுற்றி தெளிக்கப்பட்டது. ஊது பத்தி கொளுத்தி வைத்த பின்னர் சாம்பிராணி புகை கல்லறையைச் சுற்றி காட்டப்பட்டது. சீவிய மூன்று இளநீர் வைக்கப்பட்டு சூடம் ஏற்றி காட்டப்பட்டது. பின்னர் எல்லோரும் சூடம் சுடரைக் கைகளால் தொட்டு, கண்களில் ஒற்றிக் கொண்டனர். அனைவரும் கும்பிட்டனர்.

இருபதாம் நூற்றாண்டின் நிகழ்வாக காட்சிப் படுத்தப்பட்ட முன்னோர் வழிபாடு இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருவதைக் காணமுடிகிறது.

**ஆவியுலக வழிபாடு**

சிறுதெய்வ வழிபாட்டில் முக்கிய பிரிவாக விளங்குவது ஆவியுலக வழிபாடு. சமுதாய மக்களிடத்தில் ஆவிகள் பற்றிய நம்பிக்கை மற்றும் ஆன்மா பற்றிய நம்பிக்கை பரவியுள்ளதை நாவல்கள் வழி ஆசிரியர் விளக்கியுள்ளார். தேரிமணல் நாவலில்,

மணக்குடி ஊர் பகுதியில் கடற்கரையில் இருப்பது தான் கோட்டை வெங்கலராஜன் என்னும் மன்னன் கட்டிய கோட்டை அது. ஒவ்வொரு சாயங்காலமும் கடற்கரையில் இருக்கும் அந்த இடிந்த

கோட்டைக்கு வெங்கல ராஜனின் ஆவி வரும் என்று மீனவர்கள் நம்பினார்கள் இவ்வாறு நாவலாசிரியர் குறிப்பிடுகிறார்.

அருகருகே நான்கு வீடுகள் நாவலில், ஆவி-ஆன்மா பற்றி பேசுகிறது. சந்திரவதியின் அக்கா பத்மாவதி தற்கொலை செய்து கொண்டதால், அவள் ஆன்மா சந்திரவதியின் உடலில் இருப்பதாக நாவல் கூறுகிறது. பத்மாவதி சந்திரவதிக்கு நன்மை செய்ததாகவும் நம்பப்படுகிறது.

ஆவி வழிபாட்டில் மற்றொரு கூறான மாந்தீரிகம் என்னும் மந்திரச் சடங்கினை நாவலில் ஆசிரியர் கூறியுள்ளார். இறந்தவர்களை அமைதியடைய நிகழ்த்தப்பட்ட சடங்குகள், அவற்றின் அடிப்படையிலான நம்பிக்கைகள் ஆவியுலக கோட்பாடுகள் உருவாகக் காரணமாயின. நம்பிக்கைகள் சமூகத்தில் பண்பாட்டு மரபினை அறிவிக்கிறது. மனிதனின் தனிமை உணர்வும், அச்ச உணர்வும் சமுதாயத்தில் சமய-மத நம்பிக்கைகள் உருவாக காரணமாகத் திகழ்கின்றன என்பதை, நாவலின் வழி நாவலாசிரியர் உணர்த்தியுள்ளார்.

**முடிவுரை**

அலைகளின் காலம் நாவலில், தோள்சீலைப் போராட்டத்தையும், அருகருகே நான்கு வீடுகள் நாவலில் அண்ணன் தம்பிகளுக்கிடையே நடக்கும் முரண்பாட்டையும், கேரளத்திலிருந்த தமிழ் நிலப்பகுதிகளை மீட்க நடந்த எல்லை போராட்டத்தையும், தேரிமணல் நாவலில் கிறித்துவ இந்து மதத்தவரிடையே நடைபெறும் பிரச்சனைகளையும், ஆலங்கால் நாவலில் ஒரே சாதிக்குள் வர்க்க வேறுபாட்டால் காதலர்கள் சந்திக்கும் எதிர்ப்பையும் கதைக்கருவாக கொண்ட நாவலாசிரியர், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் தெய்வ நம்பிக்கை, முன்னோர் வழிபாடு, ஆவியுலக வழிபாடு என்று பண்பாட்டில் காணப்படும் மக்களின் வாழ்வை செம்மையுற காட்சிப்படுத்திக் கூறியுள்ளார்.

**துணைநூற்பட்டியல்**

1. சு.சக்திவேல், நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், முதற் பதிப்பு – ஆகஸ்டு 2022.
2. முகிலை இராச பாண்டியன், அருகருகே நாங்கு வீடுகள், PEN BIRD PUBLICATIONS, முதற்பதிப்பு, 2002.
3. முகிலை இராசபாண்டியன், தேரிமணல், முக்கடல், 11, முப்பத்து மூன்றாம் தெரு, பாலாஜி நகர், விரிவு III, புழுதிவாக்கம், சென்னை 600 091.